**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 432/2024 |
| வழக்கு சாட்சி | : | PW1 |
| நாள் | : | 12.03.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கபில் | ஜாதி | : | |
| தந்தை–கணவர் பெயர் | : | குருநாதன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**1, 4ம் எதிரி ஆஜர். 3ம் எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிரி இறப்பு.**

**<u>முதல் விசாரணை</u> :**

நான் பேரத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். சொந்தமான ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறேன். 04.11.2019 அன்று ஆட்டோ ஓட்டி வீட்டில் வருவதற்கு சுமார் 9.30 மணி ஆகிவிட்டது அப்போது கீழனுர் வேகதடை அருகே சிலர் ஓட்டி வந்து ஆட்டோவை வழி மறைத்து ஆட்டோவின் சாவியை பிடிங்கி கொண்டார்கள். மேலும், செல்போன், பணம் கேட்டு மிரட்டினார்கள். அதன் பிறகு நான் தடுத்த போது கத்தியை எடுத்து வெட்ட வந்தார்கள். அப்போது என் முழங்கையில் கத்தி வெட்டு விழுந்தது. மேலும், கண்ணாடியும் உடைத்துவிட்டார்கள். அதற்கு முன்னால் சென்ற குட்டியாணை வண்டியையும் அடித்தார்கள். அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. நான் அடிப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலிசார் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். அதில் என்ன எழுதியிருக்கிறது என்பது தெரியாது. கையெழுத்து மட்டும் போட்டேன் அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ.1 ஆகும்.** மற்றபடி வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு**

**விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சிகிச்சையில் இருந்த போது 05.11.2019 அன்று என்னுடன் மற்றொரு வண்டியில் காயம்பட்ட ஹரி என்பவரும் உள்நோயளியாக திருவள்ளுர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தோம் என்றும், அன்றைய தினம் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றும், 9ம் தேதி ஹரி என்பவர் வீட்டிற்கு வந்துவிட்டதாக கூறினார் என்றும், 13.11.2019 அன்ற என்னை தாக்கிய மூன்று நபர்களில் இரண்டு நபர்கள் வெங்கல் காவல் நிலையத்தில்பிடித்து வைத்திருப்பதாகவும் என்னை வர சொன்னார்கள் என்றும், நான் காவல் நிலையத்தில் மூன்று நபர்கள் அமர்ந்து இருந்தார்கள் என்றும், அப்போது என்னுடன் ஹரியும் வந்தார் என்றும், அந்த மூன்ற நபர்களில் நான் இரண்டு நபர்களை அடையாளம் காட்டினேன் என்றும், அவர்களின் பெயர் கோகுல் என்பவன் என் ஆட்டோ சாவியை பிடிங்கி கொண்டேன் என்றும், செல்வா என்னை வெட்ட வந்தவன் என்றும், என்னிடம் இருந்த ரூ.5,000/- பணத்தை பிடிங்கி கொண்டான் என்றும், மற்றொருவன் பெயர் ஆதித்யா என்று போலிசார் தெரிவித்தார்கள் என்றும் நாங்கள் இருவரும் அடையாளம் காட்டினோம் என்றும், மேலும், ஆய்வாளர் அவர்கள் மற்றோருவரை காண்பித்து துளசிராஜ் என்றும், அவன் என்னுடைய ஆட்டோவை சேதப்படுத்தியன் என அடையாளம் காட்டினேன் என்றும், போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 432/2024 |
| வழக்கு சாட்சி | : | PW2 |
| நாள் | : | 12.03.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அர்சனா | ஜாதி | : | |
| கணவர் பெயர் | : | கபில் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**1, 4ம் எதிரி ஆஜர். 3ம் எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிரி இறப்பு.**

**முதல் விசாரணை :**

நான் பேரத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். என கணவர் சொந்தமான ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறார். கடந்த 04.11.2019 அன்று எனது கணவர் ஆட்டோ ஓட்டி வீட்டிற்கு வருவதற்கு சுமார் 9.30 மணி ஆகிவிட்டது அப்போது கீழனுர் வேகதடை அருகே சிலர் ஓட்டி வந்து ஆட்டோவை வழி மறைத்து ஆட்டோவின் சாவியை பிடிங்கி கொண்டார்கள். மேலும், செல்போன், பணம் கேட்டு மிரட்டினார்கள். அதன் பிறகு எனது கணவர் தடுத்த போது கத்தியை எடுத்து வெட்ட வந்தார்கள். அப்போது எனது கணவரின் முழங்கையில் கத்தி வெட்டு விழுந்தது. மேலும், ஆட்டோவின் கண்ணாடியும் உடைத்துவிட்டார்கள். அதற்கு முன்னால் சென்ற குட்டியானை வண்டியையும் அடித்தார்கள். அவர்கள் யார் என்று எனது கணவருக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என் கணவர் வீட்டிற்கு வரவில்லை என்று நான் போன் செய்த போது மேற்கண்ட விவரங்களை அவர் கூறினார். அதன் பிறகு அவர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வரும்போது போலிசார் விசாரணை செய்தார். மற்றபடி இந்த வழக்கை பற்றியும், எதிரிகளை பற்றியும் எதுவும் தெரியாது.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு**

**விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

04.11.2019 தேதி எனது கணவர் கீழனூர் கிருஷ்ணவாக்கும் இடையே இரவு சுமார் 9.40 மணிக்கு வரும்போது மூன்ற நபர்கள் ஓடி வந்து ஆட்டோவை வழி மறைத்து அதில் ஒருவன் சாவியை பிடிங்கிகொண்டான் என்றும், மற்றொருவன் என் கணவரிடமிருந்த செல்போன் மற்றும் பணத்தை கொடு என்று கத்தியால் ஓங்கி வெட்ட வரும்போது எனது கணவர் ஆட்டோவை விட்டு ஓடிய போது துரத்தி வந்து வெட்ட வந்தார்கள் என்றும், எனது கணவருக்கு இடது கையில் வெட்டு விழுந்தது என்றும், அவர்கள் கத்தியை காட்டி ரூ.5,000/- பணத்தை பிடிங்கிகொண்டார்கள் என்றும், ஆட்டோவின் கண்ணாடியை உடைத்து பலத்த சேதப்படுத்தினார்கள் என்றும், மேலும் வீரராகபுரத்தை சேர்ந்த ஹரி என்பவருக்கு சொந்தமாக சேர்ந்த குட்டியானை ஓட்டிவரும்போது அவரையும் வழி மடக்கி கையால் முகத்தை தாக்கி வலது கைது மீது தாக்கி காயப்படுத்தி செல்போன் மற்றும் ரூ.7,000/- பிடிங்கிகொண்டார்கள் என்றும், அவரின் வண்டியும் சேதப்படுத்தினார்கள் என்றும், என் கணவரும், ஹரியும் சத்தம் போடவே அவர்கள் ஓடிவிட்டார்கள் என்றும், அங்கு இருந்தவர்கள் என் கணவரையும், ஹரியையும் மருத்துவனையில் சேர்த்தார்கள் என்றும், அப்போது போலிசார் விசாரணை செய்தார்கள் என்றும் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.